அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 21/95(I)

எனது இல. 11/2/3/9/40(எச்)95
தாபனப் பிரிவு,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு. 07
1995-10-26

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
பிரதான செயலாளர்கள்,
ஆளுநர்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
கூட்டுத்தாபன தலைவர்கள்,
உரிய அதிகாரிகள் யாவருக்கும்.

அலுவலக நாட்களில் (புதன்கிழமை) உத்தியோகத்தர்கள் கலந்துரையாடல் என்பவற்றிற்கு அழைத்தல்.

1995.06.19 ஆந் திகதிய 21/95 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மீது தங்களின் அவதானம் கோரப்படுகிறது.

2. அந்தச் சுற்றறிக்கையின்படி புதன் கிழமைகளில் உத்தியோகத்தர்கள் அனைவரும் அலுவலகங்களில் இருக்க வேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருக்கின்ற போதிலும் குறித்த மதியுரைகளை கவனத்திற் கொள்ளாமல் பொது உரையாடல்களுக்கும், கருத்தரங்குகளுக்கும் உத்தியோகத்தர்கள் தொடர்ந்தும் அழைக்கப்படுகின்றனர் என ஜனாதிபதியின் செயலாளர் எனது அவதானத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

3. ஆகையால் அலுவலக நாட்களில் உத்தியோகத்தர்களை சந்தித்து தமது கருமங்களை செய்து கொள்வதற்காக அதிக தூரப் பிரதேசங்களிலிருந்து வருகின்ற பொது மக்களுக்கு உத்தியோகத்தர்களை சந்திக்க முடியாமல் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளதென்பதை மீண்டும் வலியுறுத்துகின்றேன்.

4. வெள்ளநிவாரணம் அல்லது வேறு நிவாரணமளித்தல் போன்ற தவிர்க்க முடியாத விடயங்கள் தவிர்ந்த புதன் கிழமை நாட்களில் அலுவலகங்களிலிருந்து வெளி அரசகருமங்களுக்காக உத்தியோகத்தர்கள் அழைக்கப்படுதலாகாது என்பதை இத்தால் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒப்பம்: ஆர். என். ஜயரத்ன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற